# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:116** **தேதி:-13.07.2016**

**BSNL ஊழியர் சங்கத்தின் உண்ணாவிரத போராட்டம் வெற்றி**

அன்பார்ந்த தோழர்களே,

ஜார்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூர் Sr.GM ஆக இருந்த B.N.சிங், அங்குள்ள BSNL ஊழியர் சங்க தலைவர்களையும், முன்னணி ஊழியர்களையும் கடுமையாக பழி வாங்கி வந்தார். அவரது நடவடிக்கைகள் தொடர்பாக கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளிடம் நமது மத்திய சங்கம் பலமுறை விவாதித்து இருந்தது. ஆனாலும், பிரச்சனைகள் தீராத காரணத்தால் 12.07.2016 முதல் கார்ப்பரேட் அலுவலகம் முன்பு மத்திய சங்கம் உண்ணாவிரத போராட்டம் நடத்துவதாக கடிதம் கொடுத்தது. இதன் காரணமாக Sr.G.M. B.N.சிங் அங்கிருந்து பீகார் மாநிலம் கயா மாவட்டத்திற்கு மாற்றல் செய்யப்பட்டார். GM மாற்றப்பட்ட பின்னரும் நமது தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் மீது தொடுக்கப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. 12.07.2016 அன்று உண்ணாவிரதத்தை கைவிட வேண்டும் என்று கார்ப்பரேட் அலுவ்வலகம் ஒரு கடிதம் கொடுத்து. ஆனால் அந்த கடித்த்தில் உண்மையான தீர்வு எதுவும் இல்லை. எனவே நமது மத்திய சங்கம் 12.07.2016 அன்று கார்ப்பரேட் அலுவலகம் முன்பு தொடர் உண்ணாவிரத போராட்டத்தை துவங்கியது.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில் இடை இடையே மழை பெய்த போதும் கார்ப்பரேட் அலுவலகம், NTR, ஹரியானா மற்றும் உ.பி.(மேற்கு)மாநிலத்தை சார்ந்த தோழர்கள் பெருமளவில் பங்கு பெற்றனர். காலை 10 மணிக்கு சரியாக துவங்கிய உண்ணாவிரத போராட்டத்தை BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் துவக்கி வைத்தார். அவரை தொடர்ந்து தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS, தோழர் V.A.N..நம்பூதிரி புரவலர், தோழர் R.S..சவுகான், அமைப்பு செயலாளர், உதவி பொருளாளர் தோழர் குல்தீப் சிங், உ.பி.(மேற்கு) மாநில செயலாளர் தோழர் உபேந்தர் சிங் டியோடியா, ஹரியானா மாநில செயலாளர் தோழர் M.S.கடியன், கார்ப்பரேட் அலுவலக மாநில செயலாளர் தோழர் P.S..பிஷ்ட் உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர்.

FNTO சங்கத்தின் பொது செயலாளர் தோழர் கெ.ஜெயபிரகாஷ் மற்றும் NTR மாநில FNTO செயலாளர் தோழர் மொஹிந்தர் சிங் ஆகியோர் உண்ணாவிரத பந்தலுக்கு வந்து, அந்த உண்ணாவிரதத்தில் உரையாற்றினார். BSNL ஊழியர் சங்கம் நடத்தும் இந்த உண்ணாவிரத போராட்ட்தின் கோரிக்கைகளை FNTO சங்கம் ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

மதியம் ஒரு மணி அளவில் நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. நமது சங்கத்தின் சார்பாக தோழர் P.அபிமன்யு GS, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS., தோழர் R.S.சவுகான் Organising Secreary, ஆகியோர் பங்கேற்றனர். நிர்வாகத்தின் சார்பில் திருமிகு சுஜாதா ரே DIRECTOR(HR), திரு D.சக்கரவர்த்தி GM(Pers) மற்றும் திரு A.M..குப்தா GM(SR) ஆகியோர் பங்கேற்றனர். விரிவான விவாத்த்திற்கு பின் கீழ்கண்ட உடன்பாடு ஏற்பட்டது:-

1) BSNL ஊழியர் சங்கத்தின் ஜாம்ஷெட்பூர் மாவட்ட செயலாளர் தோழர் ரமேஷ் நரேஷ் பிரசாத் அவர்களுக்கு தும்காவிற்கு மாற்றல் செய்து கொடுக்கப்பட்ட உத்தரவை கார்ப்பரேட் அலுவலகம் ரத்து செய்து கடிதம் கொடுக்கும்.
2) B.N.சிங் பீகார் மாநிலத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட பின் அவர் வழங்கிய அனைத்து பழிவாங்கல் நடவடிக்கைகள் மற்றும் மாற்றல் உத்தரவுகள் அனைத்தும் ரத்து செய்யப்படும்.
3) BSNL ஊழியர் சங்கம் கொடுக்கும் பிரச்சனைகளை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் தீர்வு காணும் வகையில் கவனிக்குமாறு ஜாம்ஷெட்பூர் மாவட்ட புதிய மேலாளருக்கு அறிவுறுத்தல் செய்யப்படும். கார்ப்பரேட் அலுவலகம் அதனை மேற்பார்வையிடும்.

விண்ணதிரும் முழக்கங்களுக்கு இடையே இந்த உடன்பாட்டின் விவரங்களை பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு உண்ணாவிரதப் பந்தலில் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நமது போராட்டம் மதியம் இரண்டு மணி அளவில் முடிவுக்கு வந்தது.

மிகச்சரியான நேரத்தில் மிகப் பொருத்தமான போராட்டத்தை நடத்தி பழிவாங்குதல்களில் இருந்து ஊழியர்களை காப்பாற்றிய மத்திய சங்கத்தையும், அந்த உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களையும், தலைவர்களையும், வாழ்த்துரை வழங்கிய FNTO தலைவர்களையும், தீர்வுக்கு உதவிய அதிகாரிகளையும் தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.

**22.05.2016 அன்று JTO LICE தேர்வு எழுதிய அனைவரின் தேர்வு முடிவுகளையும் வெளியிடுக:-** BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS., மற்றும் தோழர் சுனில் கௌதம் Dy.GS., SNATTA ஆகியோர் 11.07.2016 அன்று GM (Estt) திருமிகு மது அரோரா அவர்களை சந்தித்து, 22.05.2016 அன்று தேர்வு எழுத PROVISIONAL ஆக அனுமதிக்கப்பட்ட அனைத்து ஊழியர்களின் முடிவுகளையும் அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

**அனாமலி பிரச்சனைகள் தொடர்பாக DOTஉடன் விவாதம்:-** BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS., ஆகியோர் DOTயில் உள்ள DIRECTOR (PSU-1) திரு பவன் குப்தா அவர்களை 11.07.2016 அன்று சந்தித்து அனாமலி பிரச்சனைகள் தொடர்பாக விவாதித்தனர். அனாமலி பிரச்சனைகளை BSNL தீர்வு காண்பதற்கான ஒப்புதலை DOT உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். இது தொடர்பாக DOTயின் ஒப்புதலை வேண்டி BSNL கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் எழுதியுள்ளது என்பதையும் தலைவர்கள் தெரிவித்தனர். இந்த பொறுப்பினை சமீபத்தில் தான் ஏற்றுள்ளதாக தெரிவித்த DIRECTOR (PSU-1), தேவையானவற்றை விரைவில் செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(அபாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**